அழகப்பாபல்கலைக்கழகம்,காரைக்குடி

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுமதிப்பீட்டில் A+ (CGPA : 3.64) தகுதிபெற்றது)

நாள் : 09.02.2018

## யூ.பி.எஸ்.சி. முதனிலைதேர்வுக்கான இலவசசிறப்புப் பயிற்சி

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (யூபிஎஸ்சி) மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் இதர பணிகளுக்கான முதனிலைதேர்வு 03-06-2018 அன்று நடைபெறயிருக்கிறது. இத்தேர்வுக்கான இலவச சிறப்புப் பயிற்சி அழகப்பா பல்கலைக்கழக தன்னார்வ பயிலும் வட்டத்தின் மூலம் நடத்ததிட்டமிடப்பட்டுள்ளது. இதற்கானபயிற்சிவகுப்புகள் 18-02-2018ம் தேதிமுதல் தொடங்க விருக்கிறது. அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு வேலைநாடுநர்கள் பயன்பெறும் வகையில் இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது. முதல் இருவகுப்புகள் யூ.பி.எஸ்.சி தேர்வுக்கான அறிமுக வகுப்பாகும். இதில் யூ.பி.எஸ்.சி தேர்வுக்கான பாடத்திட்டங்கள், தேர்வு பற்றிய விபரங்கள், தேர்வு நடத்தப்படும் முறை ஆகியவை குறித்த தகவல்கள் மற்றும் எவ்வாறு தேர்வை எதிர்கொள்ள ஆயத்தமாக வேண்டும் என்பது தொடர்பான தகவல்கள் அமைந்த ஒரு ஆலோசனை வகுப்பாக அது அமைந்திருக்கும். அதைத் தொடர்ந்து வரும் வகுப்புகளில் யூ.பி.எஸ்.சி. தேர்வில் வெற்றி கண்டவர்களின் அனுபவ பகிர்வு மற்றும் இத்தேர்வுக்கான பல்வேறு பிரிவுகளில் பயிற்சியளிக்கும் அனுபவமிக்க வல்லுநர்களை இனம் கண்டு அவர்கள் மூலம் பயிற்சிகள் மற்றும் மாதிரி தேர்வு நடத்தப்படும்.

இத்தேர்விற்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 06-03-18 என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தேர்விற்கு விண்ணப்பித்தவர்கள் 04565-223266 மற்றும் 88707-81897 என்ற எண்ணிற்கும் தொடர்பு கொண்டோ அல்லது alagappauniversitystudycircle@gmail.com என்ற மின் அஞ்சல் மூலமாக வோ விவரங்களை தெரிவித்து தங்களது வருகையை உறுதி செய்து கொள்ளலாம். இத்தேர்வுக்கான வகுப்புகள் அழகப்பாபல்கலைக்கழக லெ.சித.லெ.பழனியப்ப செட்டியார் நினைவு கலையரங்கத்தின் தரைத் தளத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தில் நடைபெறும் என பல்கலைக்கழக பதிவாளர் ஹா. குருமல்லேஷ் பிரபு தெரிவிக்கிறார்.

பதிவாளர்

பேரா. ஹா. குருமல்லேஷ் பிரபு